ஸம்புடம் 2] வருஷச்சந்தா ரூ. 1 8 0. [ஸஞ்சிகை 5

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

# 'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)



பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
(ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)
ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்
பிரசுரம் செய்யப்படுவது.
1936-ஞ் மே-மீ [வைகாசி-மீ

3L
Q2ma2", 1B5SS
N36·2·5
189894

## விஷயம்,


| | | | |
|---|---|---|---|
| 1 | தயாசதகம் | [தொடர்ச்சி] | 57—72 |
| 2 | பாதுகாஸஹஸ்ராவதார தத்வ விமர்சம் | [தொடர்ச்சி] | 137—144 |
| 3 | பதிலுரைகள் | [தொடர்ச்சி] | 17—28 |


# புஸ்தக விமர்சம்

ஸத்ய ஶரணாகதி ப்ரத்யுக்தி: — ஸ்ரீ அண்ணாஸ்வாமி இயற்றிய இக்ரந்தத்தை ஸேவித்தோம். இந்த சுலோகவிஷயமல்லாமல் பாடசோதனத்தில் வேறு பல விஷயங்கள் அறிவிக்கப்படுகின்றன. அத்தகைய அநேகவிஷயங்களை க்ருதஜ்ஞதையோடும் ச்லாகையோடும் அங்கீகரிக்கிறோம். இவர் சொல்லும் இந்த ச்லோகப்பொருளை ஸஹ்ருதயர் மறுக்கவேண்டியதே. கோவிலில் உத்ஸவத்தில் 10,15-வித்வான்கள் இதைப்பற்றி ஏககண்டமாக இப்படியே அபிப்ராயப்பட்டார்கள். இவர் சொல்லும் ஆதுநிகபூர்வபக்ஷக்ரந்தங்களை நாம் பார்த்ததில்லை. எம் வழியில் சில விஷயங்களை விண்ணப்பிப்போம்.

(1) இங்கே ப்ராயோபவேசமுமில்லை, ஸவிக்ரஹ ஶரணாகதியுமில்லை. இரண்டும் வேறுவேறு. 1-ல் ஸம்சயம்; 2-ல் விச்வாஸம் உயிர். 1-ல் மரணம் ஸம்பாவிதம், 2-ல் பலம் நியதம். வ்யாஹதமான இவ்விரண்டையும் கலந்தோ, விகல்பமாகவோ, ஆதாரமாக உடையது இவர் பக்ஷவிஜ்ரும்பணம். 9, 10, 44-பாராக்களைப்பார்க்க. ஸாராஸ்வாதிநீ ஸாரப்ரகாசிகைகளில் இது ஶரணாகதி ப்ராயணமன்று என்றுளது இரண்டுமில்லையேல், இவர் பக்ஷத்திற்கு அநங்கீகாரமே. (2) அக்கரை போவதற்கு உபாயமாகக் கிடக்கை வந்தது ஸ்பஷ்டம். மரணம் உபாயமாகுமா? ந ஹி ஸ்வவிநாஶாய கந்யாவிவாஹ:, பெருமாளை முடிக்கவா நாலுமந்திரிகள் மந்த்ராலோசனைசெய்து இவ்வுபாயத்தை நிச்சயித்தார்கள். இவர் மந்த்ரியாயிருந்தால் எப்படியோ?



(தா-ம்) வேதசாஸ்த்ரங்களைக் கொடுத்து அதிலுள்ள ஸம்சயங்களையும் தீர்ப்பதற்காகப் பகவானுடைய தத்வத்தை ஐயந்திரிபறத் தெளியக்காட்டும், பாகவதசாஸ்த்ரத்தைக் கொடுத்தால் மட்டும்போதாதே! கடைசியில் தேஹத்தை விடும் காலத்தில் பகவான்விஷயமாக அந்திமஸ்மரணம் வேண்டுமே, "எதை ஸ்மரித்துக்கொண்டு முடிவில் தேஹத்தை விடுகிறானோ, அதை அடைகிறான்" என்றல்லவோ கீதையில் பகவானுடைய வார்த்தை. திருமலையின் தாழ்வரையை அடைந்தவர்களுக்கு ஸ்ரீநிவாஸன் விஷயமான அந்திம ஸ்மரணத்தையும் தயையே செய்விக்கிறாள் என்கிறார். வேங்கடமலைக்குச் செல்லும்படியான பாக்யமும் தயையின் புருஷகாரத்தால் பாக்யவசத்தால் கிடைக்கிறது. வேங்கடமலைக்கு அருகிலுள்ள நாட்டில் தேஹவியோகம் அடைகிறவர்கள் கரணகளேபரங்கள் ஸ்வாதீனமில்லாவிடினும், அவசமாகவாவது தயையின் கடாக்ஷத்தால் ஸ்வாமி காப்பாற்றவேணுமென்று சொல்லுவார்கள். இதைக் கேட்ட ஸ்ரீநிவாஸன் தயையின் கடாக்ஷத்தைப் பெறுவதற்காகத் தயை சொல்லிவைத்துக் கேட்கும்படி செய்த ரக்ஷணப்ரார்த்தனைக்கு 'ஓம்' என்று அங்கீகாரத்திற்கு அடையாளமாய் பதில் வார்த்தை சொல்லிக்கொண்டு, அவன் முன்னிலையில் வந்து ஸேவை ஸாதிப்பார். 'ஓம்' என்கிற பதத்திற்கு வடமொழியில் 'ஆம்' என்றும், ஒப்புக்கொள்ளுகிறேன் என்றும் பொருளுண்டு. வேதங்களுக்கெல்லாம் ப்ரதிபாத்யனான பரமபுருஷன் வேதங்களில் முதலெழுத்தாகிய ப்ரணவமென்னும் ஓங்காரத்தைச் சொல்லி அப்படியே ஆகட்டும் என்று பதில் சொல்லுகிறான். கடைசிக்காலத்தில் பகவானுடைய திருவாக்கிலிருந்து ப்ரணவம் கர்ணமந்த்ரமாக இவன் காதில் விழுகிறது. இங்கே உத்தாரத்தினால் என்கிற பதம் பதிலைச் சொல்வதுமன்னியில் பகவானை அடைவதற்கு மார்க்கமென்று ச்ருதிபரிஷத்துக்களால் உத்கோஷிக்கப்படும் உத்தரமார்க்கமான அர்ச்சிராதி கதியையும் சொல்லும். உபநிஷத்துக்களில் ப்ரஸித்தமான உத்தரமார்க்கத்தால் பகவானுடைய ஆபிமுக்யத்தை அடையும்படி செய்கிறாரென்றும் பொருள் கிடைக்கிறது. உத்காதம் என்பது முதலுக்குப் பெயர். வேதங்களின் முதல் ப்ரணவமாகும். (48)

1 84 896



[illegible]

|| ௪௯ ||

ச்ரேயஸ்ஸூதிம் ஸக்ருதபி தயே ஸம்மதாம் ய: ஸகீம் தே
சீதோதாராமலபத ஜந: ஸ்ரீநிவாஸஸ்ய த்ருஷ்டிம் |
தேவாதீநாமயமந்ருணதாம் தேஹவத்வேZபி விந்தந்
பந்தாந்முக்தோ பலிபிரநகை: பூர்யதே தத்ப்ரயுக்தை: ||

(ப-ரை) ஹே தயே - ஓ தயையே! ய: ஜந: - யாதொரு ப்ராணியானவன், ச்ரேயஸ்ஸூதிம் - நிருபாதிகச்ரேயோரூபமான மோக்ஷத்தை உண்டுபண்ணுகிறதாயும், சீதோதாராம் - குளிர்ச்சி ஔதார்யம் இவைகள் பொருந்தியதாயிருக்கும், தே - உன்னுடைய, ஸம்மதாம் - அபிமதமான, ஸகீம் - தோழியான ஸ்ரீநிவாஸஸ்ய - ஸ்ரீநிவாஸனுடைய, த்ருஷ்டிம் - கடாக்ஷத்தை, (அதாவது - ஜாயமாந கடாக்ஷத்தை) ஸக்ருதபி - ஒரு தரமாவது, (ஒரு ஜந்மத்திலாவது) அலபத - அடைந்தானோ, அயம் - இவன், (சரீரமுள்ளவனாயிருக்கச் செய்தேயும்) தேவாதீநாம் - தேவர்கள் முதலானவர்களிடத்தில் அந்ருணதாம் - கடனில்லாமையை, விந்தந் - அடையாநின்றுகொண்டு, பந்தாத் - இத்தேஹபந்தத்தினின்று, முக்த: - விடுபட்டவனாய், தத்ப்ரயுக்தை: - அந்த தேவர்களாலே ஸமர்ப்பிக்கப்பட்டிருக்கிற, அநகை: - நிர்தோஷங்களான, பலிபி: - உபஹாரங்களாலே, பூர்யதே - பூரிக்கப்படுகிறான்.

"தயையே! எந்த மனுஷ்யன் ஸர்வோத்க்ருஷ்டமாகிய ச்ரேயஸ்ஸாகிய மோக்ஷத்தை அளிக்கக்கூடியதும், குளிர்ச்சியும் ஔதார்யமுமுடையதும், உன்னுடைய ப்ரியஸகியுமான ஸ்ரீநிவாஸ த்ருஷ்டியை அதாவது- கடாக்ஷத்தை, ஒருதரமாவது பெறுகிறானோ அவன் சரீரத்தோடு கூடியிருக்கையிலேயே தேவதைகளுக்குக் கொடுக்கவேண்டிய கடன்களிலிருந்து விடுபட்டவனாகி தேஹமென்னும் கட்டிலிருந்து விமோசனம் பெற்று அந்த தேவர்களாலே ஸமர்ப்பிக்கப்படும் உபஹாரங்களால் பூர்த்தி செய்யப்படுகிறான்".



(தா-ம்) ஸ்ரீநிவாஸனுடைய த்ருஷ்டி தயாதேவிக்கு ப்ரியமான தோழி. தயையின் கடாக்ஷங்கள் யாரிடத்தில் விழுகிறதோ அந்த இடத்தில் அவருடைய தோழியாகிய ஸ்ரீநிவாஸனுடைய த்ருஷ்டியும் கூடச்செல்லுகிறாள். தயையை அனுஸரித்துப் பெருமாள் கடாக்ஷம் கூடவிழுகிறது. ஒருதரம் அந்தக் கடாக்ஷம் பிறக்குங்காலத்தில் விழப்பெற்றால் ஸாத்விகனாகி மோக்ஷத்தில் கருத்துள்ளவனாவான் என்கிற சாஸ்த்ரவசனத்தை இங்கே நினைக்கிறார். பித்ருக்களுக்கும், தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும் கொடுக்கவேண்டிய கடன்களை மூக்கடனென்பர். தயாதேவியைச் சரணமடைந்து ஸ்ரீநிவாஸகடாக்ஷம் பெற்றவர்கள் இந்தக் கடன்களிலிருந்து விடுபடுவார். இவர்கள் மோக்ஷமடையுங்கால் இவர்களுக்குத் தேவர்கள் மிகுந்த வணக்கத்துடனும் ஆதரவுடனும் இவர்களுக்குப் பலிகள் கொண்டுவந்து ஸமர்ப்பிப்பார்கள் என்று சாஸ்த்ரம். இதனால் இவர்கள் தேவர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டியிருந்தது போய் இவர்களுக்குத் தேவர்கள் கடன்கொடுக்கவேண்டியவர்களாகிறார்கள் என்பது கருத்து. (49)

[illegible]

|| ௫௦ ||

திவ்யாபாங்கம் திசஸி கருணே யேஷு ஸத்தேசிகாத்மா
க்ஷிப்ரம் ப்ராப்தா வ்ருஷகிரிபதிம் க்ஷத்ரபந்த்வாதயஸ்தே |
விச்வாசார்யா விதிசிவமுகா: ஸ்வாதிகாரோபருத்தா
மந்யே மாதா ஜட இவ ஸுதே வத்ஸலா மாத்ருசே த்வம் ||

(ப-ரை) ஹே கருணே - ஓ தயையே! த்வம் - நீ, யேஷு - எவர்களிடத்தில், ஸத்தேசிகாத்மா ஸதீ - ஸதாசார்யரூபியாய்க் கொண்டு, திவ்யாபாங்கம் - ச்லாக்யமான கடாக்ஷத்தை, திசஸி - கொடுக்கிறாயோ, தே - அப்படிப்பட்ட, க்ஷத்ரபந்த்வாதய: -

க்ஷத்ரபந்து முதலியவர்கள், வ்ருஷகிரிவஸதிம் - திருவேங்கடமுடையானை, க்ஷிப்ரம் - சீக்ரத்தில், ப்ராப்தா: - அடைந்தவர்களாகிறார்கள். விச்வாசார்யா: - ஸர்வலோகங்களுக்கும் ஆசார்யர்களான, விதிசிவசநகாத்யா: - பிரமன் சிவன் தொடக்கமானவர்கள், ஸ்வாதிகாரோபருத்தா: - தங்கள் அதிகாரங்களாலே தடைபட்டிருக்கிறார்கள். அத: - ஆகையால், மாதா - தாயானவள், ஜடம் - மூடனை, ஸுதஇவ - பிள்ளையினிடத்தில் போல, த்வம் - நீ, மாத்ருசே - என்போலியான சேதனர் விஷயத்தில், வத்ஸலா - வாத்ஸல்யமுடையவளாகிறாய் என்று, நிச்சயிக்கிறேன்.

"தயையே! பார்விஷபத்தில் ஸதாசார்யரூபத்தைக் கொண்டு நீ உன்னுடைய திவ்யமான கடைக்கண் பார்வையை வைக்கிறாயோ, அவர்கள் பாபிஷ்டனை க்ஷத்ரபந்துவைப் போன்றவரானாலும் சீக்ரத்தில் ஸ்ரீநிவாஸனை அடைவார்கள். ஜகதாசார்யர்களான ப்ரஹ்மேசாதிகள் தங்களுடைய அதிகாரங்களால் மோக்ஷத்தில் விளம்பத்தை அடைந்து அவர்களுக்கு மோக்ஷம் தாமஸிக்கிறது. இதனால் ஸாமர்த்யமில்லாத அசட்டுப் பிள்ளைக ளிடத்தில் தாய்க்கு அதிகவாத்ஸல்யம் இருப்பதுபோல் என் போன்றவர் விஷயத்தில் தாயான உனக்கு அதிகவாத்ஸல்யமிருப்பதாக நான் நினைக்கிறேன்".

(தா-ம்) தயைக்குத் தோழியான ஸ்ரீநிவாஸத்ருஷ்டியை முன் ச்லோகத்தில் வர்ணித்தார். இங்கே தயையின் திவ்யமான த்ருஷ்டியை வர்ணிக்கிறார். ஆசார்யர்கள் தயையின் மூர்த்திகளாவார். அவர்கள் கடாக்ஷங்கள் தயையின் கடாக்ஷங்கள். இந்த தசகம் இங்கே முடிகிறது. அடுத்த தசகத்தில் சரணாகதியைச் செய்யப்போகிறார். பாபிஷ்டனை க்ஷத்ரபந்துவுக்கும் ஆசார்யனை ஆச்ரயித்ததால் மோக்ஷம் கிடைத்ததாகையால் ஆசார்யவானாக இருக்கவேண்டும் என்று சாஸ்த்ரவசனம். ஆசார்யனுடைய க்ருபையால் பாபிஷ்டர்களான க்ஷத்ரபந்துபோன்றவர்களும் ஸ்ரீநிவாஸன் திருவடியை அடைந்து முக்தரானார்கள். ஜகத்துக்கெல்லாம் ஆசார்யர்களான ப்ரஹ்மேசாதிகள் முக்திக்கு யோக்யராய் இருந்தாலும், தங்கள் தங்கள் அதிகாரங்களைச் செலுத்தி, அந்த அதிகாரம் முடிந்த பின்புதான் முக்தி அடைவர். அவர்களுக்கு



மோக்ஷம் கிடைக்கத் தாமதிக்கிறது. என்போன்ற பாபிகளுக்கு ஆசார்யகடாக்ஷப்ரபாவத்தால் சீக்ரத்தில் மோக்ஷம் கிடைத்துவிடுகிறது. இது எப்படி ந்யாயமாகும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு அழகாக ஒரு லோகத்ருஷ்டாந்தத்தைக் கொண்டு ஸமாதானம் கூறுகிறார். யோக்யதையும், ஸாமர்த்யமும், எந்தக் குழந்தைக்குக் குறைவாயிருக்குமோ அந்தக் குழந்தையினிடத்தில் யோக்யரும் ஸமர்த்தருமான மற்றக் குழந்தைகளைவிட தாயாருக்கு அதிக வாத்ஸல்யம் இருப்பது ஸஹஜம். அதைப்போல எல்லாருக்கும் தாயான தயாதேவி அசட்டுப் பிள்ளையாகிய என்னிடத்தில் அதிகமான வாத்ஸல்யத்தை வஹிக்கிறாள். (50)

அதிக்ருபணோऽபி ஜந்துரதிகம்ய தயே பவதீம்
அசிதிலதர்மஸேதுபதவீம் ருசிராமசிராத் ।
அமிதமஹோர்மிஜாலமதிலங்க்ய பவாம்புநிதிம்
பவதி வ்ருஷாசலேசபதபத்தநநித்யதநீ ॥ ௫௧ ॥

அதிக்ருபணோZபி ஜந்துரதிகம்ய தயே பவதீ
மசிதிலதர்மஸேதுபதவீம் ருசிராமசிராத் ।
அமிதமஹோர்மிஜாலமதிலங்க்ய பவாம்புநிதிம்
பவதி வ்ருஷாசலேசபதபத்தந நித்யதநீ ॥ (51)

(பதவுரை) தயே - தயாதேவியே! அதிக்ருபணோऽபி ஜந்து: - மிகவும் அகிஞ்சனனான ஜந்துவாயிருப்பவனும், ருசிராம் - அழகியதான, (அனுபரணமான) அசிதிலதர்மஸேதுபதவீம் - உடையாத (கெட்டியான, நழுவாத) சரணாகதி என்னும் (ஸம்ஸாரஸமுத்ரம் தாண்டும்) பாலமாகிய மார்க்கமான, பவதீம் - உம்மை, அதிகம்ய - அடைந்து, (நிச்சயித்து), அசிராத் - தாமதமன்னியில், (உடனே) அமிதமஹோர்மிஜாலம் - அளவிடக்கூடாத பெரும் அலைகள் கூட்டமாய் அலைக்கும், பவாம்புநிதிம் - ஸம்ஸாரஸமுத்ரத்தை, அதிலங்க்ய - தாண்டி, வ்ருஷாசலேசபதபத்தநநித்யதநீ - வேங்கடமலை அரசன் திருவடியாகிய பத்தனமென்னும் நித்யமான செல்வத்தை உடையவனாக, பவதி - ஆகிறான்.

"தயையே! மிகவும் அகிஞ்சனனான ஜந்துகூட த்ருடமான தர்மஸேதுவான பகவானை அடைவதற்கு, அழகானமார்க்கமாகிய

உன்னை அடைந்து அதிவேகமாய்ப் பசி தாஹம் ஆசை முதலிய அபரிமிதமான அலைகளின் கூட்டங்களால் மிகவும் கோரமான ஸம்ஸார ஸமுத்ரத்தைக் கடந்து வ்ருஷாசலபதியின் திருவடி என்கிற பத்தனத்தில் நித்யதனவானாகிறான். (பதபத்தநத்தைத் தனக்கு நித்யதனமாக உடையவனாகிறான்)".

இந்த ஆறாவது தசகத்தில் திருவேங்கடமுடையான் தயையினிடத்தில் சரணாகதி செய்கிறார். ஆழ்வாரும் திருவாய்மொழியில் ஆறும்பத்தில் 'அகலகில்லேனிறையும்' என்கிற பாசுரத்தில் 'உன்னடிக்கீழமர்ந்தேனே' என்று திருவேங்கடமுடையான் திருவடிகளில் சரணம் புகுந்தார். இந்த தசகத்தில் முதல் ச்லோகத்தில் தயையைச் சரணம் பற்றும் மார்க்கத்தைக் காட்டிவிட்டு, ஒன்பதாவது சுலோகத்தில் இந்த மார்க்கத்தைக் காட்டிய பரமாசிரியர்களாகிய யதிபதி யாமுனர் முதலியவர்களை ஸ்துதித்து அதனடுத்த ச்லோகமாகிய பத்தாவது சுலோகத்தில் தயையினிடத்தில் சரணம் புகுகிறார். மத்தியிலுள்ள மற்ற ச்லோகங்களில் கங்கை முதலிய நதிகளைப்போல பாபத்தைப் போக்குவது முதலிய தயாப்ரவாஹங்களைக் கூறுகிறார். இதற்கு முன் ச்லோகத்தில் பாபிஷ்டன் என்று வர்ணிக்கப்படும் க்ஷத்ரபந்து முதலியவர்களுக்கும் ஆசார்யனை ஆச்ரயித்த ப்ரபாவத்தால் மோக்ஷம் கிடைத்ததைக் காட்டினார். சரணாகதிக்கு வேறு கதி இல்லாமை என்கிற ஆகிஞ்சந்யம் இன்றியமையாதது. அதைக் கார்ப்பண்ய என்றும் சொல்லுவர். அத்யந்தம் க்ருபணனாயிருப்பவன் கூட மோக்ஷத்திற்கு மிகவும் ஸமீபமான மார்க்கமாகிய தயையை ஆச்ரயித்தால் அதிசீக்ரத்தில் அவன் ஸம்ஸாரஸமுத்ரத்தைத் தாண்டி பகவானுடைய திருவடி என்கிற நித்யதனத்தையடைந்து நீங்காச் செல்வம் பெறுவான். ச்லோகத்தின் ஆரம்பத்திலேயே 'அதிக்ருபணன்கூட' என்று கூறுவதால் சரணாகதிக்கு முக்யமாக வேண்டிய ஆகிஞ்சன்யத்தையும், அநந்யகதித்வத்தையும் காட்டுகிறார். பேதையிலும் பேதையாயிருப்பவன்கூட எல்லோருக்கும் மேல்பட்ட தனவானாவான் என்கிறார். 'ஜந்து' என்று சொல்வதால் இந்த உபாயத்தில் எல்லோருக்கும் அதிகாரம் உண்டென்று காட்டுகிறார். 'ஸேது' என்பது பாலத்தைச் சொல்லும். ஸம்ஸாரமென்னும் பயங்கரமான ஸமுத்ரத்தைத் தாண்டுவதற்குத் தயை ஓர் அழகிய பாலமாவாள். தயை மோக்ஷத்திற்கு



மிகவும் நெருங்கிய வழியுமாவாள். இந்த தசகம் பாகவதத்தில் ச்ருதி கீதை பாடப்பட்ட சந்தத்தில் ஏற்பட்டது. இந்த வ்ருத்தம் மிகவும் உருக்கத்தையுடையது. சரணாகதி செய்பவனுடைய பேதைமையைக் காட்ட இது மிகவும் அநுரூபமானது.(51)

𑌅𑌭𑌿𑌮𑍁𑌖𑌭𑌾𑌵𑌸𑌂𑌪𑌦𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌿𑌨𑌾𑌂 𑌭𑌵𑌿𑌨𑌾𑌂
𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍁𑌪𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌭𑌙𑍍𑌗𑍁𑌰𑌗𑍂𑌢𑌗𑌤𑌿𑌃 ।
𑌵𑌿𑌮𑌲𑌰𑌸𑌾𑌵𑌹𑌾 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 𑌭𑌵𑌤𑍀
𑌸𑌪𑌦𑌿 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌵 𑌶𑌮𑌯𑌤𑍍𑌯𑌘𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌂 ॥ ௫௨ ॥

அபிமுகபாவஸம்பதபிஸம்பவிநாம் பவிநாம்
க்வசிதுபலக்ஷிதா க்வசிதபங்குரகூடகதி: ।
விமலரஸாவஹா வ்ருஷகிரீசதயே பவதீ
ஸபதி ஸரஸ்வதீவ சமயத்யகமப்ரதிகம் ॥ (52)

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 - வேங்கடமலையரசன் தயையே! 𑌭𑌵𑌤𑍀 - நீர், 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍁𑌪𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 - சிலவிடங்களில் (சில ஸமயங்களில்) கண்ணுக்குத் தெரிகிறவளாயும், 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌭𑌙𑍍𑌗𑍁𑌰𑌗𑍂𑌢𑌗𑌤𑌿𑌃- சிலவிடங்களில் (சில ஸமயங்களில்) மறைந்ததும் தடைபட்டதுமான ஓட்டத்தை உடையவளாயும், 𑌵𑌿𑌮𑌲𑌰𑌸𑌾𑌵𑌹𑌾 - கலக்கமில்லாத தெளிவான ரஸத்தை (ஜலத்தை)ப் பெருக்கிக்கொண்டுவருகிறவளுமான, 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌵 - ஸரஸ்வதி நதியென்னும் அந்தர்வாஹி நதியைப்போல, 𑌅𑌭𑌿𑌮𑍁𑌖𑌭𑌾𑌵𑌸𑌂𑌪𑌦𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌿𑌨𑌾𑌂 - உன் விஷயத்தில் ஆநுகூல்யத்தை வஹிக்கிறதென்கிற ஸம்பத்தென்னும் பாக்யத்தைக் கைப்பற்றும், 𑌭𑌵𑌿𑌨𑌾𑌂 - ஸம்ஸாரிகளுடைய, 𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌂 - தீர்ப்பதற்கு அரிய, கோபலேசமும் மீறுமல், (நிர்சேஷமாக) 𑌅𑌘𑌂 - பாபத்தை, 𑌸𑌪𑌦𑌿 - உடனே, 𑌶𑌮𑌯𑌤𑌿 - போக்குகிறது.

"வ்ருஷகிரீச்வரனுடைய தயையே! ஸரஸ்வதி நதியைப் போல சிலவிடங்களில் வெளிப்படையாய்த் தெரிந்தும், சிலவிடங்களில் மறைந்து சென்றும், நிர்மலமான ஜலத்தையும், ஸ்நேஹத்தையும் ப்ரவஹித்துக்கொண்டு கிட்டே நெருங்கும் பாக்யத்தைப் பெறுகிற ஸம்ஸாரிகளின் தீராத வினைகளையெல்லாம் அதிவேகமாய்த் தீர்த்துவிடுகிறாய்."

(தா-ம்) தாய் போன்ற தயைக்கு நாம் அபிமுகமாக நோக்கி நெருங்கினால் அதினாலேயே தயைக்கு ஸந்தோஷம் பிறந்து நாம் ஆசைப்படும் மோக்ஷம் கைகூடும். 'அபிஸம்பவம்' என்பது மோக்ஷத்தைச் சொல்லும். நமக்குக் கஷ்டங்கள் ஏற்படுவது நம்மைத் திருத்தி நல்வழிக்குக் கொண்டுவருவதற்காக ஈச்வரன் கருணையால் செய்விப்பதே யொழிய வேறல்ல. நம்முடைய ஹிதத்துக்காகத் தான் கஷ்டங்கள் நமக்கு வருவது. இந்த ஹிதத்தை தயாதேவி மறைவாக நமக்குச் செய்கிறாள். நமக்கு ப்ரியமான சுகங்களை மட்டும் அவள் பஹிரங்கமாக நடக்கை தெரியும்படி செய்கிறாள். கஷ்டம் வரும்பொழுது நம்முடைய ஹிதத்துக்காக ஈச்வரன் தயவினால் அதைச் செய்கிறானென்று நாம் தெரிந்துகொள்ளுகிற தில்லை. ஆயினும் வாஸ்தவத்தில் அந்தக் கஷ்டமும் தயவினால் தான் செய்விக்கப்படுகிறது. கஷ்டம், சுகம், இரண்டும் தயா கார்யம். ஸரஸ்வதிநதி சில இடங்களில் பூமி மட்டத்தில் வெளிப் படையாக ஓடும். வேறு சில இடங்களில் பூமிக்குள்ளே மறை வாக அந்தர்வாஹினியாகப் போகும். அந்த இடங்களிலும் அந்த நதியின் ஓட்டத்திற்குக் குறைவில்லை. நமக்குக் கஷ் டங்கள் ஏற்படுவதிலும் தயையின் ப்ரவாஹத்தின் ஓட்டத் திற்குக் குறைவில்லை. ஆனால், அதுவும் தயையென்று நமக்கு வெளிப்படையாய் தெரியாமல் மறைவாக ஓடும். ஸரஸ்வதியின் நிர்மலமான ஜலங்கள் தீராத வினைகளெல்லாம் தீர்ப்பதுபோல் தயையின் சுத்தமான ப்ரவாஹங்கள் வேறு ஒரு வழியாலும் தீர்க்கமுடியாத பாபங்களை ஒரு நொடிப்பொழுதில் போக்கிவிடும்.

அபி கருணே ஜநஸ்ய தருணேந்துவிபூஷணதா
மபி கமலாஸநத்வமபி தாம வ்ருஷாத்ரிபதே: ।
தரதமதாவசேந தநுதே நநு தே விததி:
பரஹிதவர்ஷ்மணா பரிணதைர்மஹிதைர்மஹிதை: ॥ ௫௨

அபி கருணே ஜநஸ்ய தருணேந்துவிபூஷணதா
மபி கமலாஸநத்வமபி தாம வ்ருஷாத்ரிபதே: ।
தரதமதாவசேந தநுதே நநு தே விததி:
பரஹிதவர்ஷ்மணா பரிபசேளிமகேளிமதீ ॥ (53)



(ப-ரை) கருணே - தயையே! பரஹிதவர்ஷ்மணா - பிறர் ஹிதத்தை நினைக்கும் ரூபத்தாலேயே, பரிபசேளிம கேளிமதீ - பரிபாகமடைந்த விளையாட்டுடைய, தே விததி:- உன் அலை மோதும் ப்ரவாஹம், ஜநஸ்ய - ஜநங்களுக்கு, தருணேந்துவிபூஷணதாமபி - இளம் சந்த்ரனை முடிசூடிய சிவபதத்தையும், கமலாஸநத்வமபி - ப்ரஹ்மபதத்தையும், வ்ருஷாத்ரிபதே: - வேங்கடமலை அரசனுடைய, தாம அபி - வாஸஸ்தலத்தையும், தரதமதாவசேந - தாரதம்யவசத் தால், தநுதே நநு - அளிக்கவில்லையா? (அளிக்குமென்பது திண்ணம்)

"ஏ கருணையே? பிறருக்கு ஹிதத்தைச்செய்கிறதென்கிற உருவத்தை எடுத்துக்கொண்டு விளையாடும் உன்னுடைய பரப்பானது உன்னை ஆச்ரயித்தவர்களுடைய தாரதம்யத்துக்குத் தக்கபடி இளம் சந்திரனை முடியிலணிந்த ஈச்வரன் பதத்தையும் கமலாஸநனான ப்ரஹ்மாவின் பதத்தையும், வ்ருஷாசலபதியின் பதமாகிய பரமபதத்தையும் கொடுக்கிறதல்லவா?"

(தா-ம்) பிறர்களுக்கு ஹிதத்தைச் செய்வதென்பதே தயையின் ஸ்வரூபமாகும். அது தான் தயாதேவிக்கு லீலையாகும். 'ஜநம்' என்கிற பதம் ஸாமான்யமான எல்லா ஜனங்களையும் சொல்லும். இந்தப்பதத்தாலும் ப்ரபத்தி என்பது ஸர்வாதிகாரமென்பதை ஸூசிக்கிறார். (53)

த்ருதபுவநா தயே த்ரிவிதகத்யநுகூலதரா
வ்ருஷகிரிநாதபாதபரிரம்பவதீ பவதீ ।
அவிதிதவைபவாபி ஸுரஸிந்துரிவாதநுதே
ஸக்ருதவகாஹமாநமபதாபமபாபமபி ॥ ௫௪

த்ருதபுவநா தயே த்ர்விதகத்யநுகூலதரா
வ்ருஷகிரி நாதபாத பரிரம்பவதீ பவதீ ॥
அவிதிதவைபவாபி ஸுரஸிந்துரிவாதநுதே
ஸக்ருதவகாஹமாந மபதாப மபாபமபி ।

(ப-ரை) தயே - தயையே! பவதீ - நீர், ஸுரஸிந்துரிவ - தேவநதியாகிய கங்கையைப்போல, த்ருதபுவநா-

உலகத்தைத் தாங்குகிறவளாயும், த்ரிவிதகத்யநுகூலதரா - மூன்று விதமான மார்க்கங்களுக்கும் மிக்க அநுகூலமாயும், வ்ருஷகிரிநாதபாதபரிகாடவதீ - வேங்கடமலைநாதன் திருவடியின் அணைதலையுடையவளாயும், அவிதிதவைபவா அபி - அறியப்படாத மஹிமையையுடையவளாயிருந்தும், ஸக்ருதவகாஹநம் (அபி) - ஒருதரம் ஸ்நானம் செய்பவனைக்கூட (ஆச்ரயிக்கிறவனைக்கூட), அபேததாபம் - தாபம் நீங்கினவனையும், அபாபம் - பாபம் நீங்கினவனையும், ஆதநோஷி - செய்கிறீர்.

"தயையே? உலகத்தையெல்லாம் போஷிப்பவளாயும், மூன்று விதமான கதிகளுக்கும் மிகவும் அநுகூலமாயும், திருவேங்கடமுடையானுடைய திருவடியை அணைந்தவளாயும் உள்ள நீ உன்னுடைய ப்ரபாவத்தைத் தெரிந்துகொள்ளாதவர்களுக்கும் ஒருகால் உன்னிடம் இறங்கி ஸ்நாநம் செய்தவரையும், தேவ நதியாகிய கங்கையைப்போல் தாபம் நீங்கினவராயும் பாபம் நீங்கினவராயும் செய்கிறாய்."

(தா-ம்) இந்த சுலோகத்தில் பல விசேஷணங்களால் தயைக்கும் கங்கைக்கும் ஒற்றுமையைக் காட்டுகிறார். கங்கை உலகத்தை போஷித்துத் தாங்குவதுபோல் தயையும் போஷணம் செய்து தாங்குகிறாள். கங்கைக்கு மூன்று கதிகள் உண்டு. கங்கைக்கு 'த்ரிபதகா' 'த்ரிமார்க்ககா' என்று பெயர். தயை ஐச்வர்யம், கைவல்யம், மோக்ஷம் என்கிற மூன்றுவிதமான புருஷார்த்தங்களுக்கும் காரணமாகிறாள். கங்கை பகவானுடைய திருவடியை அணைந்ததுபோல் தயையும் அவன் திருவடியை அணைந்தவள். கங்கையின் வைபவத்தைத் தெரிந்துகொள்ளாமலிருந்தாலும் ஒருதரம் கங்கையில் ஸ்நானம் செய்தால் அதனாலேயே தாபமும், பாபமும் தொலையும். தயையில் ஸ்நானம் செய்வதாவது தயையினிடத்தில் பாரத்தை ஸமர்ப்பணம் செய்தல். (54)

நிகமஸமாச்ரிதா நிகிலலோகஸம்ருத்திகரீ
பஜதககூலமுத்ருஜகதி: (ஸ்வஸ்தி) பரிதப்தஹிதா ।
ப்ரகடிதஹம்ஸமத்ஸ்யகமடாத்யவதாரசதா
விபுதஸரிச்ச்ரியம் வ்ருஷகிரீசதயே வஹஸி ॥ ௫௫ ॥



நிகமஸமாச்ரிதா நிகிலலோக ஸம்ருத்திகரீ
பஜதககூலமுத்ருஜ கதி: பரிதப்தஹிதா ।
ப்ரகடித ஹம்ஸமத்ஸ்ய கமடாத்ய வதாரசதா
விபுதஸரித் ச்ரியம் வ்ருஷகிரீசதயே வஹஸி ॥

(ப-ரை) வ்ருஷகிரீசதயே - வேங்கடமலையரசன் தயையே! நிகமஸமாச்ரிதா - வேதத்தை ஆச்ரயித்தவளாயும் (வேதப்ரதிபாத்யமாயும்), நிகிலலோகஸம்ருத்திகரீ - எல்லா லோகத்திற்கும் (ஜனத்திற்கும்) ஸம்ருத்தியைச் செய்பவளாயும், பஜதககூலமுத்ருஜகதி: - பஜனம் செய்கிறவர்களுடைய பாபங்களை கரைபுரண்ட வெள்ளங்களால் போக்கிவிடுகிறவளாயும், பரிதப்தஹிதா - மிகவும் தபிக்கப்பட்டவர்களுக்கு ஹிதமாயும், ப்ரகடிதஹம்ஸமத்ஸ்யகமடாத்யவதாரசதா - ஹம்ஸம், மீன் முதலிய நூற்றுக்கணக்கான அவதாரங்கள் மிதப்பதாயும் (உள்ள நீ), விபுதஸரிச்ச்ரியம் - கங்கையின் சீரை, வஹஸி - வஹிக்கிறாய்.

"வ்ருஷாசலபதியின் தயையே! வேதங்களால் ஸமாச்ரயிக்கப்பட்டவளாயும், ஸர்வலோகங்களுக்கும் ஸம்ருத்தியை உண்டு பண்ணுகிறவளாயும், ஆச்ரிதர்களுடைய பாபமென்னும் கரையைத் தன்னுடைய வெள்ளத்தால் உடைப்பவளாயும், மிகவும் தாபத்தால் வருந்துகின்றவர்களுக்கு ஹிதத்தைச் செய்கிறவளாயும், ஹம்ஸம், மத்ஸ்யம், கூர்மம் முதலிய அநேக அவதாரங்களை வெளியில் காட்டுபவளாயும் இருப்பதால் நீ தேவநதியின் சிறப்பை வஹிக்கிறாய்."

(தா-ம்) தயைக்குச் சொன்ன விசேஷணங்களெல்லாம் கங்காநதிக்கும் ஒட்டும், வேதங்கள் கங்கையைத் துதிப்பதுபோல் தயையையும் துதிக்கின்றன. இரண்டும் வேதங்களால் ஆச்ரயிக்கப்பட்டன. இரண்டும் சகல லோகத்திற்கும் ஸம்ருத்தியைச் செய்யும், ஆச்ரிதர்களுடைய பாபத்தைத் தன்கரை புரண்ட ப்ரவாஹங்களால் போக்கடிக்கும்; தாபத்ரயங்களால் தஹிக்கப்படுபவர்களைக் காப்பாற்றும். கங்காநதியில் ஹம்ஸம், மத்ஸ்யம், யானை முதலியவை மிதப்பதுபோல் தயாவெள்ளத்தில் ஹம்ஸம் மத்ஸ்

யம், கூர்மம் முதலிய அவதாரங்கள் மிகப்பர். நங்கைக்கும் தயைக்கும் உள்ள ஸாம்யத்தை இரண்டு ச்லோகங்களால் கூறுகிறார். (55)

𑌜𑌗𑌤𑌿 𑌮𑌿𑌤𑌂𑌪𑌚𑌾 𑌤𑍍𑌵𑌦𑌿𑌤𑌰𑌾 𑌤𑍁 𑌦𑌯𑍇 𑌤𑌰𑌳𑌾
𑌫𑌲𑌨𑌿𑌯𑌮𑍋𑌜𑍍𑌝𑌿𑌤𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌸𑌂𑌤𑌪𑌨𑌾𑌯 𑌪𑍁𑌨𑌃 ।
𑌤𑍍𑌵𑌮𑌿𑌹 𑌨𑌿𑌰𑌙𑍍𑌕𑍁𑌶𑌪𑍍𑌰𑌶𑌕𑌨𑌾𑌦𑌿𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌤𑍀
𑌵𑌿𑌤𑌰𑌸𑌿 𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 𑌨𑌿𑌰𑌵𑌧𑌿𑌂 𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌨𑌿𑌧𑌿𑌮𑍍 ॥

ஜகதி மிதம்பசா த்வதிதரா து தயே தரளா
பலநியமோஜ்ஜிதா பவதி ஸந்தபநாய புந: ।
த்வமிஹ நிரங்குசப்ரசகநாதி விபூதிமதீ
விதரஸி தேஹி நாம் நிரவதிம் வ்ருஷசைலநிதிம் ॥

(ப-ரை) 𑌦𑌯𑍇 - (ஸ்ரீநிவாஸனுடைய) தயையே! 𑌜𑌗𑌤𑌿 - உலகத்தில், 𑌤𑍍𑌵𑌦𑌿𑌤𑌰𑌾 𑌤𑍁 - உன்னைத்தவிர (மற்றவர் தயை) 𑌮𑌿𑌤𑌂𑌪𑌚𑌾 - அல்பமேயுடையவராய் (அல்பமே கொடுப்பவராய்), 𑌤𑌰𑌳𑌾 - சஞ்சலமாயும், 𑌫𑌲𑌨𑌿𑌯𑌮𑍋𑌜𑍍𑌝𑌿𑌤𑌾 - பலன் கொடுப்பது உறுதியில்லாமலும், 𑌪𑍁𑌨𑌃 𑌸𑌂𑌤𑌪𑌨𑌾𑌯 - மறுபடியும் ஸந்தாபத்தைக் கொடுக்கத்தக்கதாக, 𑌭𑌵𑌤𑌿 - ஆகிறது, 𑌤𑍍𑌵𑌂 - நீ, 𑌇𑌹 - இங்கே (இது விஷயத்தில்) 𑌨𑌿𑌰𑌙𑍍𑌕𑍁𑌶𑌪𑍍𑌰𑌶𑌕𑌨𑌾𑌦𑌿𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌤𑍀 - தட்டுத்தடங்கலில்லாத சக்தி முதலிய பெருமையையுடையவளாய், 𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 - ப்ராணிகளுக்கு, 𑌨𑌿𑌰𑌵𑌧𑌿𑌂 - எல்லையற்றதான, 𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌨𑌿𑌧𑌿𑌂 - வேங்கடமலைநிதியை, 𑌵𑌿𑌤𑌰𑌸𑌿 - கொடுக்கிறாய்.

"ஸ்ரீநிவாஸனுடைய தயையே! உலகத்தில் உன்னைத்தவிர மற்றவர்களுடைய தயை அல்ப பலத்தைக் கொடுக்கக்கூடியதாயும், சஞ்சலமாயும், பலம் கொடுப்பது நிச்சயமில்லாததாயும், பின்னும் ஸந்தாபத்தைக் கொடுக்கக்கூடியதாயும் இருக்கும். நீ தடுக்கக்கூடாத சக்தி முதலிய ப்ரபாவத்தை உடையவளாய் இந்த லோகத்திலுள்ள தேஹவான்களுக்குத் திருமலையிலுள்ள எல்லையில்லாத நிதியை அளிக்கிறாய்."

(தா-ம்) சரணாகதிக்கு இன்றியமையாத கார்ப்பண்யத்திற்கு வேறு கதியில்லாமை என்கிற அநந்ய கதித்வம் வேண்டும். ஸ்ரீநிவாஸனுடைய தயையைத்தவிற வேறு கதிதான் பிழைக்கக்கிடை



யாதென்கிற நிச்சய புத்தி வேண்டும். அந்த அம்சத்தை இந்த ச்லோகத்தால் விளக்குகிறார். மற்றவருடைய தயை அல்ப பலத்தைத்தான் கொடுக்கும். மோக்ஷத்தை அளிக்க வேறொருவருக்கும் ஸாமர்த்தியமில்லை. மற்றவர் தயை ஸ்திரமாயிராது. பலம் கொடுக்கும் நிச்சயமுமிராது. அவை கொடுக்கும் பலம் கழிந்ததும், அந்த அனுபவத்தாலேயே முன்னிருந்ததைவிட அதிக ஸந்தாபம் உண்டாகும். உன்னுடைய சக்தி முதலியதற்கு அளவில்லை. உன்னை ஆச்ரயிப்பவர்க்கு அவர்கள் தேஹத்தோடு இருக்கும்பொழுதே எல்லையில்லாத பேரின்பமாகிய திருமலையிலுள்ள நிதியாகிய ஸ்ரீநிவாஸனுடைய பூர்ணானுபவ சுகத்தை அளிக்கிறார். 'பகவானை நன்றாய் அறிந்து உபாஸிப்பவர் இங்கேயே அம்ருதராவர்; பகவானை அடைவதாகிய அயனத்திற்கு நாராயணனைத்தவிர வேறு மார்க்கம் கிடையாது.' என்று சொல்லுகிற ச்ருதியின் அர்த்தத்தை இங்கே விளக்குகிறார். (56)

𑌸𑌕𑌰𑍁𑌣𑌲𑍌𑌕𑌿𑌕𑌪𑍍𑌰𑌭𑍁𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌯𑍋
𑌨𑌿𑌯𑌤𑌿𑌮𑍁𑌪𑌾𑌧𑌿𑌚𑌕𑍍𑌰𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌪𑌰𑌂𑌪𑌰𑌯𑌾 ।
𑌵𑍃𑌷𑌭𑌮𑌹𑍀𑌧𑌰𑍇𑌶𑌕𑌰𑍁𑌣𑍇 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑌯𑌤𑌾𑌂
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑌿𑌤𑌸𑌂𑌪𑌤𑌿 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌕𑌥𑌂 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌵𑌿𑌶𑌯𑌃 ॥ ॥௫௬॥

ஸகருண லௌகிக ப்ரபு பரிக்ரஹநிக்ரஹயோர்
நியதி முபாதிசக்ர பரிவ்ருத்தி பரம்பரயா ।
வ்ருஷபமஹீதரேச கருணே விதரங்கயதாம்
ச்ருதிமித ஸம்பதி த்வயி கதம் பவிதா விசய: ॥

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌭𑌮𑌹𑍀𑌧𑌰𑍇𑌶𑌕𑌰𑍁𑌣𑍇 - வேங்கடத்தர்சன் தயையே! 𑌸𑌕𑌰𑍁𑌣𑌲𑍌𑌕𑌿𑌕𑌪𑍍𑌰𑌭𑍁𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌯𑍋𑌃 - தயையுள்ள லௌகிக ப்ரபுக்களுடைய தயையும் (அன்பும்) கோபமும் ஆகிய இவ்விரண்டின், 𑌨𑌿𑌯𑌤𑌿𑌂 - பலன் கொடுக்கும் நிச்சயத்தை (உறுதியை), 𑌉𑌪𑌾𑌧𑌿𑌚𑌕𑍍𑌰𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌪𑌰𑌂𑌪𑌰𑌯𑌾 - ஆநுகூல்யம் ப்ராதிகூல்யம் முதலிய உபாதிகள் மாறிமாறிச் சுழன்றுவந்து பலன்கள் கொடுக்கும் க்ரமத்தினால், 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑌯𑌤𑌾𑌂 - ஸம்சயமற ஆராய்ந்து தெளிகிறவர்களுக்கு, 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿

ச்ருதிஸாக்ஷிணி த்வயி - வேதங்களால் தெளியச்செய்துள்ள பெருமையையுடைய உன் விஷயத்தில், விமய: - ஸம்சயமானது, கதம் பவிதா - எப்படி உண்டாகும் ?

"வ்ருஷப பர்வத நாதனுடைய கருணையே ? தயையுள்ள லௌகிக ப்ரபுக்கள் அவர்களுக்கு அநுகூலமானவர்களை அனுக்ரஹித்தும், ப்ரதிகூலமானவர்களை நிக்ரஹித்தும், இப்படி அவர்களிடத்தில் ஆநுகூல்ய ப்ராதிகூல்யங்களால் அனுக்ரஹ நிக்ரஹங்கள் மேலும் மேலும், சக்ரம்போல் சுழன்றுவருவதைக் கவனித்துப் பார்த்து வேதத்தினால் தெரிவிக்கப்படும் உன்னுடைய வைபவத்தில் ஏன் ஸம்சயம் நீங்கி அசஞ்சலமான மஹாவிச்வாஸம் பிறக்காது."

(தா-ம்) யாரைச் சரணமடையவேண்டுமோ அவர்களுக்கு அநுகூலத்தையே செய்யவேண்டுமென்கிற தீர்மானமாகிய ஆநுகூல்யஸங்கல்பமும், அவர்களுக்கு ப்ரதிகூலத்தை எப்பொழுதும் விலக்கவேண்டும் என்கிற ப்ராதிகூல்யவர்ஜநமும் அவச்யம் வேண்டும். இது உலகத்திலுள்ள ப்ரபுக்களுடைய தயை விஷயத்தில் நாம் நன்றாய்க் காண்கிறோம். உலகந்யாயப்படிக்கு அத்ருஷ்டமான வேதம் காண்பிக்கும் விஷயத்திலும், நாம் ஸஹித்துக்கொண்டு கருணாநிதியான ஈச்வரனை ஆநுகூல்யஸங்கல்பத்தோடும் ப்ராதிகூல்யத்தைத் தவிர்ப்பதென்கிற நிச்சயத்தோடும், நாம் அவனை கதியென்று ஆர்த்தியுடன் சரணம் புகுந்தால் அவன் நிச்சயமாய்க் காப்பாற்றுவான் என்பதை நன்றாய்த் தெரிந்துகொள்வதற்குத் தயவோடு கூடிய லௌகிகப்ரபுக்கள் விஷயத்தில் இந்த விஷயத்தை ப்ரத்யக்ஷமாகக் காண்கிறபடியால், இந்த உலகந்யாயத்தைக்கொண்டு ஸுலபமாய் நம்முடைய நம்பிக்கையை த்ருடமாகச் செய்துகொள்ளலாம் என்பதைக் காட்டுகிறார். மஹாவிச்வாஸம் என்பது அவச்யம் வேண்டும். ஈச்வரன் ரக்ஷிப்பான் என்பதில் என்றும் தளராத விச்வாஸம் வேண்டும். சரணாகதிக்கு வேண்டிய மூன்று அங்கங்களை இந்த ச்லோகத்தில் விளக்குகிறார். தயாவான்களான லௌகிகப்ரபுக்கள் இந்த விஷயத்தைக் காணலாம். நிஷ்கருணர்களான ப்ரபுக்கள் விஷயத்தில் இந்த அம்சங்கள் இருக்கமாட்டாவாகையால் 'ஸகருண லௌகிகப்ரப' என்று கூறினார்.



வ்ருஷகிரிக்ருஷ்ணமேகஜநிதாம் ஜநிதாபஹாராம்
த்வதபிமதிம் ஸுவ்ருஷ்டிமுபஜீவ்ய நிவ்ருத்ததர்ஷ: ।
பஹுஷு ஜலாசயேஷு பஹுமாநமபோஹ்ய தயே
ந ஜஹதி ஸத்பதம் ஜகதி சாதகவத் க்ருதிந: ॥ ॥௫௮॥

வ்ருஷகிரிக்ருஷ்ணமேகஜநிதாம் ஜநிதாபஹாராம்
த்வதபிமதிம் ஸுவ்ருஷ்டிமுபஜீவ்ய நிவ்ருத்தத்ருஷ: I
பஹுஷு ஜலாசயேஷு பஹுமாநமபோஹ்ய தயே
ந ஜஹதி ஸத்பதம் ஜகதி சாதகவத் க்ருதிந: II (58)

(பதவுரை) தயே - தயையே! வ்ருஷகிரிக்ருஷ்ணமேகஜநிதாம் - வேங்கடமலை (யுச்சியிலுள்ள) கருமேகத்தால் வர்ஷிக்கப்படுவதும், ஜநிதாபஹாராம் - பிறவியென்னும் தாபத்தை அபஹரிப்பதுமான, த்வதபிமதிம் - உன்னுடைய அபிமானமென்கிற, ஸுவ்ருஷ்டிம் - குளிர்ந்த (கருணை) மழையை, உபஜீவ்ய - ஆச்ரயித்து, நிவ்ருத்ததர்ஷ: க்ருதிந:-கொடுத்து வைத்த பாக்யவான்கள், சாதகவத் - சாதகபக்ஷியைப்போல, ஜகதி - உலகத்தில், பஹுஷு ஜலாசயேஷு - அநேக தடாகங்களில், பஹுமாநம் - கௌரவத்தை, அபோஹ்ய - நீக்கிவிட்டு, ஸத்பதம்-நன்மார்க்கமாகிய உன்னை (ஆகாசத்தை), ந ஜஹதி - விடமாட்டார்கள்.

"தயையே! பாக்யவான்கள் வ்ருஷகிரியிலிருக்கும் க்ருஷ்ண மேகமாகிய ஸ்ரீநிவாஸனால் உண்டுபண்ணப்படும் ஜந்மதாபஹரமான உன்னுடைய அபிமதி என்கிற சிறந்த மழையைச் சாதக பக்ஷியைப்போல உபஜீவித்துத் தங்கள் தாஹத்தைத் தீர்த்துக் கொண்டு வேறுள்ள அநேக ஜலாசயங்களில் பஹுமதியை விட்டு நல்ல மார்க்கத்தை விடாமலிருக்கிறார்கள்."

(தா-ம்) அநந்யகதித்வம் என்னும் குணத்தை சாதகபக்ஷியின் த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு காட்டுகிறார். சாதக பக்ஷியை க்ருஷ்ணமேகை காந்தி என்பர். நீருண்ட கார்மேகமாகிய க்ருஷ்ண மேகத்திலிருந்து நேரில் தன் வாயில் விழும் ஜலத்திவலைகளால் சாதகபக்ஷி தன் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளுமேயல்லாது கீழேவிழுந்த மழை ஜலம் நிறம்பிய குளங்களிலாவது, ஆறுகளிலாவது தண்ணீரை அருந்தாது. ஆகாசத்தை விஷ்ணுபதம் என்பர். விஷ்ணுபதத்திலிருந்து கிருஷ்ணமேகத்தினிடமிருந்து

வரும் வ்ருஷ்டி ஜலத்தையே எதிர்பார்த்து அதுவே கதியென்று இருப்பது சாதக பக்ஷியின் ஸ்வபாவம். இப்படியே காருண்யை காந்திகளும் ஸ்ரீநிவாஸனென்னும் திருமலையிலுள்ள க்ருஷ்ண மேகத்தின் தயாத்ருஷ்டியே கதியென்றும், ஸம்ஸாரத்தில் உள்ள சகலவிதமான தாபங்களையும் அதைக்கொண்டே போக்கிக்கொள்ள வேண்டுமென்றும், த்ருடமான நிச்சயத்துடன் இருக்கவேணும். 'ஜலாசயம்' என்கிற பதம் வடமொழியில் 'ஜடாசயம்' என்றுமாகும். ஜடாசயமென்றால் ஜடமதியென்று பொருள். சரணாகதி செய்பவர் சாதக பக்ஷியைப்போல் இருக்கவேண்டுமென்றும், சரணமடையப்படுகிறவர் கபோதபக்ஷியைப்போல் இருக்கவேண்டுமென்றும் ப்ரமாண வசனம். கபோத பக்ஷியின் த்ருஷ்டாந்தத்தை விபீஷணனுக்குச் சரணாகதிக்கும் அவஸரத்தில் ஸுக்ரீவனுக்கு பகவான் எடுத்துக்காட்டினார். (58)

த்வது³த³யதூலிகாம்ருது³நா வ்ருஷஶைலஜுஷா
ஸ்தி²ரசரஶில்பிநைவ பரிகல்பிதசித்ரதி⁴ய: ।
யதிபதியாமுநப்ரப்⁴ருதய: ப்ரத²யந்தி த³யே
ஜக³தி ஹிதம் ந நஸ்த்வயி ப⁴ரந்யஸநாத³தி⁴கம் ॥ (௫௯)

த்வதுதயதூலிகாபிரமுநா வ்ருஷசைலஜுஷா
ஸ்திரசரசில்பிநைவ பரிகல்பிதசித்ரதிய: ।
யதிபதியாமுநப்ரப்ருதய: ப்ரதயந்தி தயே
ஜகதி ஹிதம் ந நஸ்த்வயி பரந்யஸநாததிகம் ॥ (59)

(ப-ரை) தயே - தயையே! ஸ்திரசரசில்பிநா - அவ்யாக்ருதங்களான ஸ்திரப்பொருள்களையும், அழிவதான வ்யாக்ருதப்பொருள்களையும் படைக்கும் சில்பியான, ஏநா - இந்த, வ்ருஷசைலஜுஷா - திருவேங்கடத்தானாலேயே, த்வதுதயதூலிகாம்ருதுநா - உன்னுடைய உதயமென்னும் ப்ராரப்யங்களென்னும் பூச்சுக்குச்சிகளால், பரிகல்பிதசித்ரதிய: - அமைக்கப்பட்ட ஆச்சர்யமான புத்திசித்திரங்களையுடைய, யதிபதியாமுநப்ரப்ருதய: - எம்பெருமானார், ஆளவந்தார் முதலிய ஸித்தாந்தஸ்தாபனாசார்யர்கள், த்வயி - உன்னிடத்தில், பரந்யஸநாத் - ஆத்மாவின் பரத்தை ஒப்புவிப்பதைக் காட்டிலும், அதிகம் - பெரிதான, ஹிதம் - க்ஷேமம், ஜகதி - உலகத்தில், ந: - எங்களுக்கு, ந - இல்லை என்று, ப்ரதயந்தி - ப்ரகாசப்படுத்துகிறார்கள்.



எவ்விதத்திலும் இங்கே இதைப் பற்றிய விசாரம் அநாவச்யகம். ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரான ஸ்ரீதேசிகஸார்வபௌமருடைய திவ்யாத்புதசக்தி விசேஷத்தைப்பற்றி யாருக்கு என்ன விரோதாபிப்பிராயமுண்டு? எல்லா காவ்யங்களை அதிசயித்தும், ஸர்வஹ்ருத்யமுமான இந்த ஸ்துதிரத்னத்தைச் செய்த விஷயத்தில் சீக்ரம் செய்வதனால் உயர்த்தியுமில்லை. மெள்ளச் செய்ததனால் இளப்பமுமில்லை காவ்யத்திற்காவது கவிக்காவது என்று புத்திமான்கள் அறியவேண்டும்" என்று 27, 28 பக்கங்களில் இவருடைய நிஷ்ப்ரமாணமும் ஸ்வபூர்வோக்தி விருத்தமும் ப்ரமாணவிருத்தமுமான பேச்சு.

ஓர் இரவில் சுலோகங்கள் செய்வது ஸம்பாவிதம்தான் என்பதற்கு இவரே 24-ம் பக்கத்தில் காரணங்களை எடுத்துக் காட்டினார். ஒரு நாழிகையில் நூறு சுலோகங்களைச்சிலர் கவனம் செய்ய, அதைக் கண்ட நான் ஒப்புக்கொள்ளுகிறேனென்கிறார். ஒரு யாமமாத்ரத்தில் ஸ்ரீதேசிகன் 1000-ஸ்லோகம் செய்வது ஸம்பாவிதமென்றும் சொல்லுகிறார். இவ்வளவும் பேசிவிட்டு அதற்கு விபரீதமாக, கேவலம் தம்முடைய அஸூயையாலும், பக்ஷபாதத்தாலும், ஸகலவைதிகவித்வான்களுக்கும் விரோதமாக இது நம்பத்தக்கதன்று என்கிறார். ஒரு யாமத்திற்குள் செய்ததாக வைபவப்ரகாசிகையில் இல்லை. ஒரு ராத்ரிக்குள் ஸாதித்ததாகவும், மறுநாள் பெரியபெருமாள் முன் அரங்கேற்றி, கவிதார்க்கிகஸிம்ஹம் என்ற திருநாமம் அளிக்கப்பட்டதாகவும் ஸாதித்துளது. இந்த ஸ்தோத்ரத்திலேயே இதற்குள்ள அடையாளங்களைக் காட்டினோம். 'வ்ருதி ஜெஜு' என்பது 'ஸவ்யாஹ்ருதேவமதம்'. அதுவும் ஒரு சீக்ரமான காலத்தைக் குறிப்பிடும். நிரம்பவும் விரைவாய் ஸ்வல்பகாலத்திற்குள் இருக்கவேண்டும் என்பதை இவரும் மறுக்கமுடியாது. 'விஷயம் மட்டும் ஒன்று' என்பதைப்பற்றி மட்டும் ப்ரதிஜ்ஞை என்று இவர் பேசுகிறார். காலத்தைப்பற்றியும்தான் சேர்த்துப் பிரதிஜ்ஞை இருந்திருக்கவேணும். பாசுரமாகவாகக் கணக்கிடப் பட்டு வந்ததை ஸ்வாமியே ஸாதித்திருக்கிறார். மற்ற அடையாளங்களையும் காட்டினோம். ஸ்ரீதேசிகனுக்கு எதிரியாகச் சில

விஷயங்களில் அவதாரம் செய்திருப்பதாக நினைத்தும் பேசியும் வந்த இவருடைய ஶாஸ்த்ராவலோகநாதிகளால் ஸூக்ஷ்மத்ருஷ்டியைத் தவிர, இவர் நூதனப்பேச்சிற்கு ப்ரமாணம் கிடையாது என்பதோடுகூட ஸர்வப்ரமாணங்களாலும் இவரது தனிக் கொள்கை பாதிதம். இத்தனை காலத்திற்குள் செய்யப்பட்ட தென்று எந்த க்ரந்தத்திலாவது ஸ்ரீ தேசிகனால் ஸாதிக்கப் பட்டுள்ளதா? ஶததூஷணீ என்னும் அரும்பெரும் க்ரந்தம் ஸ்வல்பதினங்களில் நடந்த வாதத்தைத்தானே எழுதியிருக்கி றது. இத்தனை நாள்களிலெழுதினதாக அதில் எழுதப்பட்டி ருக்கிறதா? இந்த க்ரந்தத்திலேயே உள்ள அடையாளங்களைக் காட்டினோம். 7- நூற்றாண்டுகளாக எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு எல்லாச் சுவடிகளிலும் வசககணமாய் ஓர் இர விற்குள் இயற்றப்பட்டதென்பதை இவரது ஸம்பாஷி மாற்றமுடியாது. சீக்ரம் ரசனம் செய்வதால் ஓர் உத்கர்ஷமும் இல்லையென்கிறார். இந்தப் பேச்சு உந்மத்தாவஸ்தையைத்தான் காட்டும். விழித்துக்கொண்டிருப்பவர் இப்படிப் பேசுவரோ? ஶீக்ரகவி என்பது பெருமையுள்ள பெயரன்றோ? ஓர் இரவில் ஆயிரம் ச்லோகம் இத்தனை அற்புதமாக இந்த ஒரு விஷயத் தைப்பற்றியே கவனம் செய்ததிலும் உத்கர்ஷம் வேறெங்கேயா வது காணமுடியுமோ? இப்படிப்பட்ட உத்கர்ஷம் ஸ்ரீதேசிக னுக்கு இருக்கிறதே என்றுதான் இவருக்கு அஸூயை. இவர் தாம்தான் தேசிகபக்தர் என்று பேசுகிறார். இவரது ஶிஷ்யர் ஸ்ரீசைலர் என்பவர், இவர்தான் ஸ்ரீதேசிகஸம்ப்ரதாயப்ரவர்த்தகராய் இருக்கத்தகுந்தவர் என்கிறார். 'ந வநம் யோக்யஸந்நிதி' என்றார் பெருமாள், அஸூயாளுக்களிடம் நடுங்கி. "அஸூய காய மாம் மா:" என்று விவேகி அஸூயாளுவைக் கண்டு நடுங்கும். இவர் வாதங்கள் நிஸ்ஸாரமாகையாலும், பரஸ்பர வ்யாஹதமாகையாலும், அஶ்ருதபூர்வமாகையாலும், உபஹாஸ ஸ்பதத்துக்கு பாத்ரமேயொழிய, ஒருவருக்கும் ஸம்மதமா வாகாது. ஆகையால், கரைபுரண்ட அஸூயை என்னும் ஸாம க்ரியினால், இவர் ஸமஞ்ஜஸர் என்னும் விருதை ஸ்தாபித்துக் கொள்ள ஆசைப்படுகிறார்போலும். 'க்ருவதிப்ரியான வாக்கி



னால் அமைக்கப்பட்டது' என்கிற இவர் பேச்சினழகைக் கவ னிக்கவேணும். ஓரிரவில் செய்தால் வாக்கு க்ரமிகமல்லவோ? பிறர் பணிப்பு விஷயத்தில் இவருபயோகித்த விசேஷணங்கள் இவருடைய இந்த புதுப்பொய்ப் பணிப்பிற்குப் பொருந்தும்.

ஆயிரம் ச்லோகங்களையும் எழுதியாகவேண்டுமே, ஓர் இரவில் எழுதியாகுமா? என்று கேட்கலாம். 27-ம் பக்கத்தில் “வேறெல்லா வ்யாபாரத்தையும் விட்டுவிட்டு சோம்பலையும் ஒழித்து, மிகவும் கெட்டிக்காரனாயிருப்பவனும் (1000-ச்லோ கங்களை) எழுத ஆரம்பித்தால், எழுதி முடிக்க எத்தனையோ யாமங்கள் செல்லுமென்பதை மறுக்கமுடியாது” என்பது இவர் பணிப்பு. இவர் தம்முடைய புத்தியைச் சிறிதளவேனும் உப யோகப்படுத்தியிருந்தால் இவரிப்படிப் பேசமாட்டார். இந்த ஆயிரம் ச்லோகங்களையும், ஒருவரே எழுதியதாக யார் சொன் னார். அதிஸாமர்த்யமாகப் பல சிஷ்யர்களையும், ஸஹ்ருத்துக்க ளையும் கொண்டு, உடனுக்குடன் எழுதிவைக்கக் கூடிய வழி யைக் காட்டுவோம். அன்றிரவு கோயிலிலுள்ள அநேகவித்வான் களும் வித்யார்த்திகளும் நூற்றுக்கணக்காக இரண்டு கவிகளுடைய திருமாளிகைகளிலும்கூட இருந்திருக்கவேண்டுமென்பதில் ஐய மில்லை என்பதை முன்பே சொன்னோம். சிஷ்யர்கள் எத்த னையோ பெயர்களுளர் என்பது நிஸ்ஸம்சயம். 'ஶஶ்வத்ஸூத்ரவ்ய யாபதாந' என்று ஸாராவளி முதல் ச்லோகத்தில் ஸ்ரீஸா ஹித்யத்தை மிகவும் கவனமுடைய ஶிஷ்யர்களுக்கு எப்பொழுதும் காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டிருப்பதை ஸாதிக்கிறார். 'அவ ஹிதவஹாவிதாயதீயயாதி' என்று அதே ச்லோகத்தில் வஹாஜ்ஞரான பெரியோர்கள் ஸந்தோஷம் அவஹிதராய் ஆத ரத்துடன் கவனித்துக்கொண்டிருக்க அவர்கள் முன்னிலையில் ஸாராவளியை ரசனை செய்வதாக ஸாதிக்கிறார். 'விவேக ராஜவதிவாதகயோ: ப்ரஸாவ:' என்ற 32-வது ச்லோகத்தி னால் இந்த க்ரந்தம் ரசனை செய்யும்பொழுது எழுதப்பட்ட தாக ஸூசிதமாகிறது. ஸ்ரீநாரஸம்ஹத்தில் ப்ரஸாவபத்ததியில் இது இரண்டாவது ச்லோகம். ராமாயணம் முதலில் எழுதப் படவில்லை. ஸ்ரீமத்பாகவதமும் அப்படியே. மஹாபாரதம் அவ

நமாகையில் எழுதப்பட்டதாக ஊஹிக்கிறோம். அப்படித்தான் இந்த க்ரந்தமும் என்று நினைக்கிறோம். சிஷ்யர்கள் தமது ஸ்வாமியை ஸாக்ஷாத்காரமாகச் செய்துகொண்டு பாதுகாஸிரஸான தொண்டர்கள் பரதாழ்வான், பாதுகை, நம்மாழ்வார், வால்மீகி இவர்களிடம் பூர்வமான பக்தியோடு தந்மயபாவத்தையடைந்து ஶ்லோகங்களை கவநம் செய்துகொண்டே போகத் தொடங்குகையில், ஒவ்வொரு ச்லோகத்திலும் ஒரு பாதியை ஒரு சிஷ்யருக்குச் சொல்லிவிட்டு, மற்றொரு பாதியை மற்றொரு சிஷ்யருக்கும், இப்படியே ஓரோர் பாதியை ஓரோர் சிஷ்யருக்கு ஸாதித்துக்கொண்டே போனால் அவரவர்களுக்கு ஸாதித்த பாதியை அவரவர்கள் எழுதிக்கொண்டு அதற்கு இலக்கமும் போட்டுக்கொள்ளலாம். ஐந்து ச்லோகங்கள் பத்து சிஷ்யர்களுக்குப் பாதிபாதியாக ஸாதித்துக்கொண்டே போனால், ஐந்து ச்லோகம் கவநம் செய்வதற்குள் ஓரோர் பாதியும் ஸாவதானமாக எழுதியாகும். ஒரு பாதியை ஒருவர் யாசித்துக்கொண்டு எழுதுவது ப்ரயாஸமென்றால் ஒரு பாதமாவது யாசிக்கமுடியாதா? ஓர் பாதமாய் ஒவ்வொருவருக்குச் சொல்லி, 10- 20- பெயர்களைக்கொண்டு அதிஸாவதானமாக எழுதிவைக்கக்கூடும். ஓரே இரவில் மிகவும் வேகமாக இந்த ஸூக்தம் கவநம் செய்யப்பட்டதற்கு அநேகமான ஸவதாநங்களின் பணிப்பும், ஸம்ப்ரதாயமுமிருப்பதுடன், 14-வது ச்லோகத்தில் "ஈச்வரன் திருமுடி ஜடையிலிருந்து சுழன்றுகொண்டிருந்த மஹாப்ரவாஹம் அதிவேகமாய்க் கீழே தாரைதாரையாய் ஆகாசத்திலிருந்து ஓடிவருவதுபோல் ச்லோகங்கள் வேகமாய் வரவேண்டுமென்று அநுக்ரஹத்தை ப்ரார்த்திக்கிறதாலும்" இரவிற்குள் வேகமாக க்ரந்தம் ரசனையாகவேண்டிய அவச்யமிருந்தது என்பது ஸூசிதமாகிறது. "ஸ்ரீரங்கராஜனுடைய ரத்நபாதுகையே! வேகமாக (ஜவாத்) உண்மையாகத் துதிக்க ஆசைப்படுமெனக்கு உம்முடைய நாதாச்ரிதயாரையோ என்று ஸந்தேஹிக்கக்கூடிய அத்தனை இனிமையும், இக்காவ்யகுணங்களின்பொடுடன் ப்ரவாஹமாய் பிறைமுடியோடு கூடிய ஸம்பு ஸேவாபர் ச்லாகிக்கையிலுண்டான ப்ரீதிவேகத்தால் மலைபோன்றவிசாலமான ஜடை-



